மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 169/2024**

பி.வா.சா. 1 குமார், S/o மாரியப்பன்
நாள்: 18.03.2026
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) இந்த வழக்கின் வாதிகள் எனக்கு உறவினர்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கு தெற்கே மற்றும் கிழக்கே எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்குச் சொத்தும். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தும் அதில் பொன்னையா என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். அவர் என்னுடைய தாத்தாவின் அப்பா ஆவார். பொன்னையாவுக்கு 4 வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். மேற்படி பொன்னையா அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் இரு சம பாகங்களாக பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

2) பொன்னையா என்பவரின் மகன் நல்லையா என்னுடைய தாத்தா என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாத்தா ஆறுமுகம் எந்த வருடம் இருந்து வழக்கு சொத்துக்கு தென்புறம் உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். அதுபோலவே வழக்கு சொத்துக்கு கிழக்குபுறமுள்ள சொத்துக்களை என்னுடைய தாத்தா திருவேங்கடம் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். திருவேங்கடம் எந்த வருடத்திலிருந்து என்னுடைய தாத்தா கிரையம் பெற்ற ஆவணத்தை பி.வா.சா.ஆ.1 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

3) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழ மேல் 18 கஜம் தென்வடல் 7 கஜம் அளவுள்ள சொத்தை தான் கிரயம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். 18

கஜம் என்று சொன்னால் 54 அடி அளவு என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி 54 அடி சொத்துக்கு மேல் உரிமை கோர எனக்கும் என்னுடைய தாத்தாவுக்கும் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆவணத்தை எழுதிக் கொடுத்த திருவேங்கடம் அவர் கைவசம் உள்ள இடத்துக்கு கிழக்கு பக்கம் உள்ள இடத்தை எழுதிக் கொடுத்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும் அந்த ஆவணத்தில் ஆவணத்தை எழுதிக் கொடுத்த திருவேங்கடம் அவருடைய கைவசம் எவ்வளவு இடத்தை வைத்துள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிழ மேல் 5 கஜம் என்று சொல்லப்பட்டுள்ளது.

4) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து மற்றும் திருவேங்கடம் கைவசம் வைத்திருப்பதாக சொல்லப்படும் சொத்து ஆகியவைகளை சேர்த்தால் வரும் சொத்தின் விஸ்தீரனமானது, அதற்கு தென்புறம் உள்ள நல்லையா ஆறுமுகம் என்பவரிடமிருந்து வாங்கிய சொத்தில் விஸ்தீரனமும் ஒரே அளவு என்று சொன்னால் சரியல்ல. ஆறுமுகம், பொன்னையா என்பவரின் மகன் என்று சொன்னால் சரியல்ல. ஆறுமுகம் நல்லையா என்பவரிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தின் விஸ்தீரனமும், திருவேங்கடம் கையில் வைத்திருந்த சொத்தின் இடமும் ஒரே அளவு தான் என்றும் நான் வழக்குக்காக வெவ்வேறானது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5) திருவேங்கடம் அவருடைய தகப்பனாரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 72 அடி நிலத்தில் எனது தாத்தாவுக்கு கிரையம் கொடுத்த 54 அடி நிலம் போக மீதி நிலம் திருவேங்கடத்துக்கு பாத்தியப்பட்ட நிலம் என்று சொன்னால் சரியல்ல. திருவேங்கடம் அவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தைப் பொறுத்துதான் இந்த வழக்கின் வாதிக்கு ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணமானது எனக்கு என்னுடைய தகப்பனார் மற்றும் சகோதரனால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான்.

6) பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்துக்கு மேற்கு பக்க எல்லையாக தெரு மற்றும் மாரியப்பன் மனைவி சண்முகம் ஓட்டு வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்கு பக்க எல்லையாக காண்பிக்கப்பட்டுள்ள சண்முகம் என்பவரின் ஓட்டு வீட்டின் கிழக்குப் பக்க சுவர் எனக்கும் பொதுச்சுவர் என்று காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சண்முகம் என்பவரின் ஓட்டு வீடானது இரு புறங்களிலும் சாய்ப்பு கொண்ட ஓட்டு வீடு என்று சொன்னால் சரிதான். ஓட்டுக் கூரையானது அந்த வீட்டின் கிழக்கு பக்க சுவற்றுக்கு வெளியே நீட்டி அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஓட்டுக் கூரையானது அந்த வீட்டின் கிழக்கு பக்க சுவற்றுக்கு ¾ அடி வெளியே நீட்டி அமைக்கப்பட்டுள்ளது என்றும் வழக்குக்காக நான் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து கிழ மேல் அளவு 58 அடி என்று எழுதுவதற்கு பதிலாக 54 அடி என்று எழுதப்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி தவறை திருத்துவதற்கு நானும் எனது தகப்பனாரோ தற்பொழுது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் வருவாய்த்துறை ஆவணங்களின்படி அளவீடு செய்து பார்த்தால் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம் சரியாக உள்ளது. வருவாய் துறை ஆவணங்களின் படி எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கு கிழ மேல் அளவு என்ன சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் தற்பொழுது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படியும், வருவாய்த்துறை ஆவணங்களின் படியும் எனக்கு 54 அடி நிலம் மட்டும்தான் பாத்தியம் என்றும், நான் தான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

8) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி வாதிக்கு 18 அடி நிலம் கிரயம் கொடுக்கப்பட்டது என்றும், அது எனக்கு தெரிந்திருந்தும் நான் பிரச்சனை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஆவணத்தின் படி எனக்கு 54

அடி நிலம் பாத்தியப்பட்டிருந்த காரணத்தினால் தான் நான் மேற்படி தவறை திருத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் தற்பொழுது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நீதிமன்ற ஆணையர் அவருடைய அறிக்கையில் வருவாய் துறை ஆவணங்களின்படி அளவு செய்தால் வழக்கு சொத்துக்கு கிழக்கு பக்கம் 1 அடி நிலம் இருக்கிறது என்றும், ஆவணங்களின்படி அளவு செய்தால் கிழக்கு பக்கம் 3 அடி நிலம் இருக்கிறது என்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

9) மேலும் நீதிமன்ற ஆணையர் அவருடைய அறிக்கையில் வருவாய்த் துறையில் உள்ள ஆவணங்களை விட வடப்பக்கம் கிழ மேல் அதிகமான இடத்தில் நான் கட்டிடம் கட்டி உள்ளதாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தை விட அதிகமான இடத்தில் கட்டுமானம் கட்டிவிட்டு, தற்பொழுது வாதி சுவற்றில் பொது பங்கு உரிமை உள்ளதாக நான் பிரச்சனை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி வீட்டு தென் வடல் கிழக்கு பக்க சுவர் வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சுவர் என்றும் அதற்கும் கிழக்கே வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வாதி வைத்துள்ள ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலமானது பூமியில் உள்ளது என்றும், அதனால் வாதி கேட்டுள்ள பரிகாரம் பாதிக்க கிடைக்க கூடியது என்றும் சொன்னால் சரியல்ல. வாதியின் அனுபவத்தை நான் தொடர்ந்து இடைஞ்சல் செய்து வருகின்ற காரணத்தினால் வாதி கேட்டுள்ள உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது சகோதரரும் கூடுதல் அளவைக் காட்டி எழுதியுள்ள ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்று

**சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு